**ஆரச்சிகட்டுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 16 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 24 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 110,800 ஆன புடவை உறை மீளாய்வாண்டில் நிலையான சொத்தாக கணகீடு செய்யப்பட்டிருந்த போதும் வேலை களஞ்சிய இருப்பிலிருந்து அகற்றாததால் ரூபா 110,800 யினால் வேலை களஞ்சியம் மற்றும் திரண்ட நிதியம் கூடுதலாக காட்டப்பட்டிருநன. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | கடந்த ஆண்டுகளுக்காக அறவிடப்பட்டு வைப்பாக குறிக்கப்பட்டிருந்த காணி பங்குபடுத்தும் குத்தகை ரூபா 417,868 மற்றும் மோடர் கிறேடரை வாடகைக்கு வழங்கியதன் வருமானம் ரூபா 74,000 மீளாய்வாண்டு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | உரிய ஆண்டிற்கு சீராக்கம் செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | வைப்பு கணக்கு மற்றும் வைப்பு பதிவேட்டிற்கிடையிலான வித்தியாசத்திற்கு ஜர்னல் குறிப்பு 46 ஊடாக வைப்பு கணக்கில் ரூபா 453,763 வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் ரூபா 453,763 | வைப்பு கணக்கு மற்றும் வைப்பு பதிவேட்டிற்கிடையிலான வித்தியாசத்தை இனங்கண்டு | காணி பங்குபடுத்தும் குத்தகை மற்றும் மோடர் கிறேடர் வருமானம் ரூபா 491,868 வைப்புக் கணக்கு மீதியிலிருந்து அகற்றப்படாமை ஜர்னல் குறிப்பு 46 இலான |

| | | | |
|---|---|---|---|
| | செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணகீடு செய்ய வேண்டும். | வித்தியாசத்திற்கு காரணமாவதுடன் அவ்வித்தியாசத்தை சீராக்கிய பின்னரும் மேலும் ரூபா 38,105 ஆன வித்தியாசம் கணக்கு மற்றும் பதிவேட்டிற்கிடையில் காணப்பட்டது. அதனை எதிர்வரும் ஆண்டில் கணக்கு தயாரிக்கையில் கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv) | முன்னைய ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய ஓய்வூதியம் ரூபா 420,000 யினை ஜர்னல் குறிப்பு 02 ஊடாக ஓய்வூதிய கணக்கிற்கு வரவு வைக்கப்ட்டிருந்த்து. | ஆண்டிற்குரிய செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான சபைக்கு கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 59,883,574 ஆனதுடன் அவற்றில் 05 வருடங்களை விஞ்சிய மீதிகள் ரூபா 21,148,839 ஆனது. | பெற வேண்டிய தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 27,802,817 ஆனதுடன் அவற்றில் 01 வருடத்தை விஞ்சிய மீதிகள் ரூபா 1,884,415 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 1,554,408 யினை 2020 ஆண்டினுள் செலுத்தியுள்ளதுடன், எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) <u>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம்</u> | | | |
| 126(xxvii) உப பிரிவு. | மீனவ தொழிலாளர்களின் நலன்புரி வசதிகளுக்காக துணை விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக துணை சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் துணை விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) பொது நிர்வாக சுற்றிக்கை | | | |
| 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றிக்கை. | சபையினால் வழங்கப்படும் அனைத்து சேவைகளுக்குமான பிரஜைகள் சாசனமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதும் 09 மக்கள் சேவைகளுக்காக பிரஜை சாசனமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வழங்கப்படும் சேவைகளுக்கான பிரஜைகள் சாசனமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பிரஜை சாசனத்தை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை. | | | |
| xxiv அத்தியாயத்தின் 1.6 பந்தி | இடம் மாறிச் சென்ற 35 அலுவலர்கள்/ ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 129,310 ஆன கடன் தொகை 11 ஆண்டுகளினுள் தீர்க்கப்படிருக்கவில்லை | அறவிட வேண்டிய ஊழியர் கடனை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை கடன் மீதிகளை அறவிட குறித்த ஊழியர்களுக்கு கடிதம் மூலமாக அறிவூட்டப்பட்டதுடன் அக் கடன்களை |

.

செலுத்தாதுவிட்டால் பிணையாளரிடமிருந்து அக் கடனை தவணைகளாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,817,939 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,090,303 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 7,376 | 7,774 | 7,595 | 12,124 | 7,059 | 7,085 | 6,834 | 10,945 |
| (ii) | வாடகை | 5,772 | 7,990 | 7,990 | 2,098 | 4,856 | 7,609 | 9,838 | 2,492 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,083 | 1,561 | 1,561 | - | 1,135 | 1,185 | 1,209 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 50,628 | 50,628 | 57,088 | 42,499 | 49,048 | 49,048 | 26,329 | 54,226 |
| | கூட்டுத் தொகை | 64,859 | 67,953 | 74,234 | 56,721 | 62,098 | 64,927 | 44,210 | 67,663 |

சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டில் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமும் உள்ளடங்கியுள்ளது.

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மொத்த பில்லிடப்பட்ட வருமானம் ரூபா 67,953,787 மற்றும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய நிலுவை வருமானம் ரூபா 68,215,721 உம் ஆனதுடன், மீளாய்வாண்டினுள் | வருடாந்தம் பில்லிடப்பட்ட வருமானங்களை ஆண்டினுள்ளயே அறவிட நடவடிக்கை எடுக்க | நிலுவை தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | |
|---|---|---|
| பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து ரூபா 74,234,860 சேர்க்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆண்டினுள் மொத்த வருமானம் செகரித்தலின் முன்னேற்றம் 55 சதவீதம் மாத்திரமே ஆனது. | வேண்டும். | |

**2.2.3 வீத வரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீத வரி மற்றும் வரி நிலுவை ரூபா 11,501,179 ஆனதுடன் சபை வீத வரி சேகரிக்கும் பொறுப்பை உரிய முறையில் மேற்கொண்டிருக்கவில்லை. | அனைத்து நிலுவை வீத வரி மற்றும் வரியை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் நிலுவை தொகையிலிருந்து ரூபா 622,904 அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவை குத்தகை ரூபா 1,880,387 மற்றும் கடையறை வாடகை ரூபா 102,460 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிலுவை கடை வாடகை மற்றம் குத்தகை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடை வாடகையிலிருந்து ரூபா 80,639 யினை அறவிட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குத்தகை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந் நிலுவையிலிருந்தும் ரூபா 34,953 அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து ரூபா 4,070,684 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 23,562,590 ஆன முத்திரைக் கட்டணம் அறவிட வேண்டியதாக இருந்தது. | அனைத்து நிலுவை தொகையையும் துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்து ரூபா 3,422,500 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையைத் துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். 2008 முதல் 2013 வரை நிலுவை முத்திரைக் கட்டணம் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்காக பெற வேண்டிய முத்திரைக் |

| | | |
|---|---|---|
| | | கட்டணம் ரூபா 13,955,380 இலிருந்து ரூபா 1,614,080 தொகை 2020 ஜுன் 02 ஆம் திகதி கிடைத்துள்ளது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மக்கள் சுகாதாரம் மற்றும் நலன்புரி முறைகள் பிரகாரம் சுகாதாரத்தை பாதிக்கக் கூடிய உணவிற்கு அல்லது குடிப்பதற்கு பயன்படுத்தும் பொருட்களை தடை செய்தல், அகற்றுதல் மற்றும் அவற்றை விற்பனைக்கு வைப்பதை தடுத்தல் மற்றும் வெதுப்பகம், உணவகம், ஹோடல்களை ஒழுங்குபடுத்தல், கண்கானிப்பு செய்தல் போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தலுக்காக துணைச் சட்டங்கள் விதிக்ககப்பட்டிருக்க வில்லை. | துரிதமாக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | நிறைவேற்றப்பட்டுள்ள உப விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ii) | பிரதேச சபை எல்லையில் காணப்படும் சமூக பெறுமானத்துடன் கூடிய பறவைகள் சரணாலயத்தை பாதுகாக்க உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | குறித்த உப விதிகளை எதிர்காலத்தில் விதிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு முதல் கொம்போஸ்ட் கருத்திட்டங்கள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதும் கழிவுகளை வெளிப்படுததுவதற்காக பொருத்தமான சூழலுடனான காணியொன்றை பெற்றுக்கொள்வதற்கு சபையினால் இயலாமலிருந்தது. | கொம்போஸ்ட் கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் சபை அதிகார எல்லையினுள் தினத்தோரும் சேர்க்கப்படும் குப்பைகளை இறுதியாக வெளியிட 05 ஏக்கர் காணி பிரதேசம் ஒன்றை |

| | | | |
|---|---|---|---|
| | | | கோரி பல சந்தர்ப்பங்களில் பல்வேறு நிறுவனங்களுக்கு கோரிக்கை விடப்பட்ட போதும் அது தொடர்பாக எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என இத்துடன் அறிவிக்கிறேன். |
| (ii) | சபையினால் சேர்க்கப்படும் குப்பைகள் வேறுபடுத்தலின்றி வெளிப்படுத்தல் செய்யப்படுவதுடன் உக்கலடயாத பொருட்கள் ஊடாக சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக கவனத்திக்கொண்டிருக்கவில்லை. | குப்பைகளை வேறுபடுத்தி உரிய கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்த வேண்டும். | எமது சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள கொம்போஸ்ட் கொட்டில் நிர்மாணிப்பதற்கான கருத்திட்ட அறிக்கையை காணி பயன்பாட்டு குழுவிற்கு சமர்ப்பித்து வைரன்கட்டடுவ அரச காணியிலிருந்து 05 ஏக்கர் காணிப் பகுதியொன்றை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்தம் அதிகரித்துச் செல்லும் நிலுவை வருமானமான நீர் கட்டணம், முத்திரைக் கட்டணம் மற்றும் நீண்ட காலமாக அறவிடப்படாது நிலவும் வீதவரி, எக்கர் வரி மற்றும் கடையறை வாடகை வருமானங்களை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீத வரி நிலுவையிலிருந்து 2019 ஆண்டில் வீத வரி நிலுவை சேகரிப்பு ரூபா 2,683,508 ஆனதுடன் நிலுவை தொகையை அறவிடுவதற்கு வேலை திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. நிலுவை கடையறை வாடகையிலிருந்து ரூபா 80,639 தொகையை அறவிட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்பட்டுள்ளது. குத்தகை வாடகை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்துளளதுடன் அத் தொகையிலிருந்தும் ரூபா 34,953 அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையையும் துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் இரண்டாம் தர பதவிகளில் 10 வெற்றிடங்களும் ஆரம்ப தர பதவிகளில் 07 வெற்றிடங்களும் நிலவிதுடன் ஒப்பந்த/அமைய பதவிகளுக்காக 09 நபர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியிற்கு மாற்றமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ளவும் நீண்ட கலமாக நிலவும் மேலதிக ஊழியர் அளவை முறையாக அங்கீகரித்திற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.12.31 திகதிற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 85 ஆனதுடன், உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 77 ஆனது. 17 வெற்றிடங்கள் காணப்படுவதுடன், மேலதிக ஊழியர் எண்ணிக்கை 09 என காட்டப்படுவது அமைய/ஒப்பந்த அடிப்படையில் சபையினால் சம்பளம் வழங்கப்படும் ஊழியர்களாகும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்குரிய சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளக கணக்காய்வு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு முறையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு முறையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு அலகை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அதன் ஊடாக கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |